**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.9 /2021- PW-2**

| | |
|---|---|
| Name | திரு.பார்த்தசாரதி |
| Husband/Father Name | திரு.சுரந்தரராஜன் |
| ID Card | Verified |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 28.07.2025.

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் 3 ஆண்டுகள் 15.08.2021 முதல் 18.08.2024 காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். வா.சா.ஆ.17 முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்யவில்லை. அந்த வழக்கில் ஏற்கனவே இருந்த காவல் ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மறுவிசாரணை செய்து, ஆவணங்களை பரிசீலனை செய்து குற்ற இறுதி அறிக்கையை நான் தாக்கல் செய்தேன். குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பிறகு அந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தேனா என்றால் நீதிமன்ற உத்தரவின் பேரில் விசாரணை செய்தேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் 1–ம் பிரதிவாதி Crl.O.P.No.4173/2021 தாக்கல் செய்து, அதில் இடைக்கால தடை உத்தரவு பெற்றிருந்தார் என்றால் எனக்கு இடைக்கால தடை உத்தரவு கிடைக்கப்பெறவில்லை. Crl.O.P.No.4173/2021 வழக்கில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரத்தை 1–ம் பிரதிவாதி என்னிடம் தெரிவித்து உத்தரவு நகல் கொடுத்த பிறகும் கூட நான் அந்த உத்தரவிற்கு எதிராக குற்ற வழக்கில் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் 1–ம் பிரதிவாதி இடைக்கால உத்தரவு நகல் எதுவும் கொடுக்கவில்லை. Crl.O.P.No.4173/2021 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லாததால் அது பற்றி தெரிவிக்க இயலவில்லை. நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி பணம் பெற்றுக்கொண்டதற்கான பி.சா.ஆ.4 ரசீது இந்த வழக்கின் பிரதிவாதிகளால் போலியாக தயாரிக்கப்பட்டது என்பது சம்மந்தமாக மட்டுமே

என்னை அந்த குற்ற வழக்கில் மேற்கொண்டு விசாரணை செய்ய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை விசாரித்து அது சம்மந்தமாக அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு செய்யப்பட்டிருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் 26.06.2023 தேதியிட்ட Crl.O.P.No.4173/2021–ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தான் மேல்விசாரணை மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு இணையதள பதிவிறக்க நகல் **பி.சா.ஆ.7** ஆகும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் நான் விசாரணை மேற்கொண்ட போது போலியாக தயாரிக்கப்பட்ட ரசீது என சொல்லப்பட்ட ரசீதை வாதி என்னிடம் கொடுக்கவில்லை. பத்திரம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மட்டும் கொடுத்தார். வாதி இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட சாட்சியத்தில் அந்த ரசீது தன்னால் கையொப்பம் செய்யப்பட்ட ரசீது தான் என ஒப்புக்கொண்ட விவரத்தை என்னிடம் நான் மேற்கொண்ட விசாரணையின் போது சொல்லியுள்ள விவரத்தை நான் பதிவு செய்தேனா என்றால் என்னுடைய விசாரணையில் அவர் அவ்வாறு சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள 2–ம் பிரதிவாதி மீது இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் பேரில் நடந்த வழக்குகள் அனைத்தும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, 2–ம் பிரதிவாதி விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2–ம் பிரதிவாதி மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் மற்றும் அதன் தொடர்ச்சியான குற்ற வழக்குகள் தீர்ப்பான விவரங்கள் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(1–ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்பட்ட குறுக்குவிசாரணையில் 2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணையாகவும் பாவித்துக்கொள்ள அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டு அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.)

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

Sd/-A.Balakrishnan,
I Additional District Judge,
Ranipet.